අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/07/101/14/2023/CR

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.11.24

சுற்றறிக்கை இலக்கம் 40/2023

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்,

அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து கோட்டக் கல்வி பணிப்பாளர்கள்,

அனைத்து பிரிவெனா தலைவர்கள்,

கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள்,

**கடின -மிகக் கடின - தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு பாதணிகள் விலைக்கு வாங்க பரிசுப்படிவங்கள் வழங்கும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

கடந்த ஆண்டுகளைப் போலவே, 2023 ஆம் ஆண்டிலும், கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவெனாக்களின் சாதாரண மற்றும் பிக்கு மாணவர்களுக்கும் நாங்கள் பாதணி பரிசுப்படிவங்கள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த பரிசு படிவங்களை மாணவர்களுக்கு வழங்கும் செயல்முறை தொடர்பாக இந்த சுற்றறிக்கையின்படி செயல்பட வேண்டியது கட்டாயமாகும்.

02. கல்வி அமைச்சினால் பாடசாலை பாதணி பரிசுப்படிவங்கள் உங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்னர், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதுடன், அந்தந்த மாணவர்கள், மாணவ பிக்குகள் மற்றும் சீலமாதாக்களுக்கு பரிசுப்படிவங்களை தாமதமின்றி பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

03. மாகாணக் கல்வித் திணைக்களங்களிலிருந்து கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் தொடர்பாக வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்வி அமைச்சின் பிரிவேன கிளையிலிருந்து பிரிவின்கள் தொடர்பாக வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த பரிசுப்படிவங்கள் வழங்கப்படுகின்றன.

04. இதன்போது,

4.1 2023ஆம் ஆண்டில் பாதணிகளை விலைக்கு வாங்க அனைத்து பயனாளிகளுககும் ரூ. 3,000/= மதிப்புள்ள பரிசுப்படிவங்கள் வழங்கப்படும்.


4.2 2023 ஆம் ஆண்டில், பாடசாலை பாதணி பரிசுப்படிவங்களுக்காக பாதணிகளை வழங்குவது அதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கணினி பயன்பாட்டின் மூலம் கல்வி அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகர்களிடமிருந்து மாத்திரமே மேற்கொள்ளப்படும்.


ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister: +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary: +94112784811, +94112785162, secretary.education@moe.gov.lk

4.3 இந்த பரிசுப்படிவம், அதிபரின் பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டிய (பகுதி 1), வர்த்தக பிரிதிநிதி பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டிய (பகுதி 2) மற்றும் வர்த்தக பிரதிநிதியால் மீண்டும் அனுப்ப வேண்டிய (பகுதி 3) எனும் வாறாக வேறுபடுத்திக்கொள்ளும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒரு பரிசுப்படிவத்தின் மாதிரி வடிவத்தின் உதாரணம் பின்வருமாறு.

முன்பக்கம் / பின்பக்கம்


Government Subsidy Scheme for School Children
2023
கல்வி அமைச்சு
Ministry of Education
பாடசாலைப் பாதணி வழங்குவதற்கான பரிசுப்படிவம்
மாகாணம்:
மாவட்டம்:
பாடசாலை:
மாணவர் பெயர்:
பரிசுப்படிவ இல: 12345678912345698745
ரூ. 3000/=
கா. வ. திகதி 2023.12.27


விற்பனையாளரினால் பூரணப்படுத்தி கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டியது.
விற்பனையாளரிடம் வைத்துக் கொள்ள வேண்டியது
அதிபரிடம் வைத்துக் கொள்ள வேண்டியது
தாய் / தந்தை/ பாதுகாவலர் அவர்களினால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.
தாய்/ தந்தை/ பாதுகாவலர் பெயர் :
தேசிய அடையாள அட்டை இலக்கம் :
கையொப்பம் :
விற்பனையாளரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும்
வழங்கப்பட்ட திகதி :
அதிபர்
(அதிகாரப்பூர்வ முத்திரை)

05. கல்வி அமைச்சினால் பாதுகாப்பான அச்சிடும் முறைகளைப் பயன்படுத்தி அச்சிடப்பட்ட பாதணி பரிசுப்படிவங்கள், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களுக்கு ஏற்ப பொதி செய்யப்பட்டு, கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு ஏற்ப பிரிக்கப்பட்டு மாகாண கல்வி திணைக்களத்திற்கு விநியோகிப்பதற்கு வழங்கப்படும்.

06. வலயக் கல்வி அலுவலகங்கள் / கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பரிசுப்படிவங்கள் வழங்கல்.

கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு வழங்கப்படும் பரிசுப்படிவங்களை உடனடியாக வலயக் கல்வி அலுவலகங்களுக்கு விநியோகிக்க வேண்டும், மேலும் இந்தப் பரிசுப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பிரிவெனாக்களுக்கு உடனடியாக விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கோட்டக் கல்வி அலுவலகங்கள் தங்கள் பிரிவில் உள்ள கடினமான, மிகக்கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கு பரிசுப்படிவங்களை சரிபார்த்து ஒப்படைக்க வேண்டும்.
(கல்வி அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு பாதணி பரிசுப்படிவங்கள் வழங்கும் போது, SSV 01 (EDU) மாதிரி படிவமும் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு பாடசாலை பாதணி பரிசுப்படிவங்களை வழங்கும் போது SSV 01 (Zone) மாதிரி படிவமும் வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பாடசாலை பாதணி பரிசுப்படிவங்களை வழங்கும் போது SSV 01 (DIV)

மாதிரி படிவமும் வலய அலுவலகங்கள் மூலம் பிரிவேனாக்களுக்கு பாதணி பரிசுப்படிவங்களை வழங்கும் போது SSV 02 (Piv) படிவமும் பயன்படுத்தப்பட வேண்டும்.)

07. பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவெனாதிபதிகளுக்கு பரிசுப்படிவங்களை வழங்குதல்/ ஏற்றுக்கொள்ளல்

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களின் படி, வேறுவேறாக பொதி செய்யப்பட்டு பாடசாலை அதிபர்கள் மற்றும் பிரிவெனாதிபதிகளுக்கு கோட்ட கல்வி அலுவலகங்கள் மற்றும் வலய கல்வி அலுவலகங்கள் (பிரிவேனா) வழங்கும் பாதணி பரிசுப்படிவங்களை தொடரிலக்கத்தின்படி கவனமாக சரிபார்த்து ஒப்படைக்க வேண்டும்./ பெற்றுக்கொள்ள வேண்டும்.

இங்கு, கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் வலய அலுவலகங்கள் (பிரிவேனாவுக்கு) SSV 02 (Sch) / SSV 02 (Piv) படிவங்களைப் பயன்படுத்தி பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களுக்கு பாடசாலை பாதணி பரிசுப்படிவங்களை வழங்க வேண்டும்.

08. மாணவர்களுக்கு பரிசுப்படிவங்களை வழங்குவதற்கு அதிபர்கள் / பிரிவேனாதிபதி தேரர்களுக்கு அறிவுறுத்தல்கள்.

08.1 கல்விக் கோட்ட அலுவலகங்கள் மற்றும் கல்வி அமைச்சின் பிரிவேனா பிரிவினால் அந்தந்த பாடசாலைகள் மற்றும் பிரிவெனாகள் தொடர்பில் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பாக அனுப்பப்பட்ட தகவல்களின் அடிப்படையில், பாடசாலை பாதணி பரிசுப்படிவங்கள் பாடசாலைகளுக்கு/ பிரிவெனாக்களுக்கு ஏற்ப தனித்தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதோடு பாடசாலைகள் / பிரிவெனாகள் பிரகாரம் வகுப்பறை பெயர்ப்பட்டியல்களிலுள்ள பெயரை உறுதிப்படுத்தி உண்மையான மாணவர்களுக்கு மட்டுமே பரிசுப்படிவங்களை வழங்குவது அதிபர்கள் /பிரிவெனாதிபதிகள் பொறுப்பாகும்.

08.2 பாடசாலை/பிரிவேனாவுக்கு வழங்கப்படும் பாதணி பரிசுப்படிவங்களை துணை கோப்புறை பதிவேட்டில் பதிவு செய்து பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதோடு அவற்றை மிக விரைவாகவும் துல்லியமாகவும் பயனாளிகளுக்கு விநியோகிக்க பொருத்தமான திட்டத்தைப் பயன்படுத்த அதிபர்கள் / பிரிவெனாதிபதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கு, பயனாளிகளின் பெயர்களை உள்ளிட்டு தயாரிக்கப்படும் SSV 03 படிவத்தை சரியாக பூர்த்தி செய்து, அந்தந்த பரிசுப்படிவங்களை பயனாளிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்து, வழங்கப்பட்ட பரிசுப்படிவங்களின் அடிப்பகுதியை (counterfoil) பாதுகாப்பாக அதிபரின் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும். பாடசாலைக்கு கிடைக்கப்பெற்ற பாதணி பரிசுப்படிவங்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பின்னர் மேலும் மீதம் இருப்பின் அவை SSV 04 படிவத்தில் உள்ளடக்கி பாதுகாப்பாக பொதி செய்து கல்வி அமைச்சின் பெறுகை பிரிவுக்கு கிடைக்கக்கூடியதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் / வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

08.3 குறிப்பிட்ட பாடசாலையொன்றுக்கு வழங்கப்பட்ட பாடசாலைப் பாதணி பரிசுப்படிவ தொகை போதுமானதாக இல்லாத பட்சத்தில், உரிய காரணங்களுடன் கோட்டக் கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் சிபாரிசுகளுடன் SSV 05 படிவத்தின் ஊடாக கல்வி அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட வேண்டும். தேவையான மேலதிக பரிசுப்படிவங்கள் தொகை கல்வி அமைச்சினால் விநியோகிக்கப்படும்.

08.4 பாடசாலைக்கு வழங்கப்படும் அனைத்து பரிசுப்படிவங்களின் பின்புறத்தில் அதிபரின் உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட வேண்டும்.

08.5 உத்தியோகபூர்வமாக முத்திரையிடப்பட்ட படிவங்கள் ஒவ்வொரு வகுப்பினருக்கும் வழங்குவதற்காக வகுப்புப் பொறுப்பு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். வகுப்பு ஆசிரியர் இந்தப் பரிசுப்படிவங்களை ஆவணப்படுத்தி ஒவ்வொரு பரிசுப்படிவத்திலும் அந்தந்த மாணவர்களின் பெயர்களை எழுதி மாணவர்களுக்குப் பரிசுப்படிவங்களை வழங்கி அவர்களின் கையொப்பங்களைப் பெற வேண்டும், இதற்காக SSV 03 படிவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

08.6 தரம் 1 முதல் 5 வரையிலான மாணவர்களுக்கு பாதணி பரிசுப்பபடிவங்களை பகிர்வதில் முறையான நடைமுறை பின்பற்றப்படுவதை அதிபர் உறுதி செய்ய வேண்டும். (பெற்றோரை வரச்செய்து அவர்களுக்கு நேரடியாக பரிசுப்படிவங்களை வழங்குவது பொருத்தமானது.)

08.7 பரிசுப்படிவத்தின் பெறுமதி மற்றும் பரிசுப்படிவ இலக்கம் பழுதாகிப்போனால் அது செல்லாததாகிவிடும் என்பதால் கவனமாக இருக்க வேண்டும்.

08.8 இந்த அன்பளிப்பு வழங்கப்பட்ட பிறகு, மேற்படி கையொப்ப ஆவணம் (SSV 03 ) எதிர்கால கணக்காய்வு நோக்கங்களுக்காக பாடசாலையில்/பிரிவேனாவில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் மற்றும் பிரிவெனாதிபதி/அதிபரால் சான்றளிக்கப்பட்ட பிரதியை கல்வி அமைச்சின் பெறுகை பிரிவுக்கு அனுப்ப வேண்டும்.

08.9 அதிபரால் பெறப்பட்ட அனைத்து பாதணி பரிசுப்படிவங்களை முறையான மற்றும் சரியான முறையில் அனைத்து மாணவர்களுக்கும் வெளிப்படையான முறையில் வழங்குவதற்கு அதிபர் கடமைப்பட்டுள்ளார் என்பதோடு அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் முறையான முறையில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

08.10 இந்த பரிசுப்படிவங்களின் காலாவதித் திகதி 27.12.2023 என்பதாக குறிக்கப்பட்டிருப்பதால், அந்தத் திகதிக்கு முன்னதாக மாணவர்களுக்கு பாதணிகளை வாங்குமாறு அதிபர் தெரிவிக்க நடவடிக்கை வேண்டும்.

09. இந்தச் பரிசுப்படிவத்தில் பாதணிகளை கொள்வனவு செய்வது தொடர்பில் பெற்றோருக்குத் தெரிவிப்பது அதிபரின் கடமையாகும். ஆனால் பாதணிகள் வாங்குவது தொடர்பாக எந்த ஒரு வர்த்தக நாமத்தை அல்லது கடையை விளம்பரப்படுத்தாமல் இருக்க அதிபர்கள் கவனமாக இருக்க வேண்டும். கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் மாத்திரமே பாதணிகளை வாங்க வேண்டுமென பெற்றோருக்கு தெரிவிக்க வேண்டும்.

10. மாணவர்களுக்கு பாதணி பரிசுப்படிவங்கள் வழங்கப்பட்ட பிறகு மிகையானவற்றை ஒப்படைத்தல்.

10.1 ஏதேனும் ஒரு பாடசாலைக்கு பரிசுப்படிவங்கள் வழங்கப்பட்ட பின்னர் மேலதிகமாக இருந்தால், அதிபர் வலய/ கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்து, மேலதிகமான பாதணி பரிசுப்படிவங்களை SSV 04 மூலம் கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் முறையாக ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**11. பொது விடயங்கள்**

11.1 அதிபரால் பாடசாலைக்கு கிடைத்த பரிசுப்படிவங்களை மாணவர்களுக்குப் விநியோகித்த பின்னர், மீதமுள்ள பரிசுப்படிவங்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். அதற்கு, பரிசுப்படிவங்களை திரும்பப் பெறுவதற்கான ஆவணத்தை இரண்டு பிரதிகளாகத் தயாரித்து, பரிசுப்படிவ இலக்கம், பெறுமதி, வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களை அதில் உள்ளிட வேண்டும். இதற்கு SSV 04 படிவம் பயன்படுத்தப்பட வேண்டும். பரிசுப்படிவங்கள் வழங்குவதற்கான ஆவணத்தின் ஒரு பிரதியை பாடசாலையில் பத்திரமாக வைத்துக்கொண்டு, மற்றைய பிரதியை தொடர்பான பரிசுப்படிவங்களுடன் ஒப்படைக்க வேண்டும். பரிசுப்படிவங்கள் மீதியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது குறித்து SSV 04 படிவம் மூலம் தெரிவிக்க வேண்டும். விநியோகிக்கப்பட்ட அனைத்து பரிசுப்படிவங்களின் அடிப்பகுதி பாடசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

11.2 பாடசாலைகளில் இருந்து வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட அறிக்கைகள் குறித்து வலயக் கல்விப் பணிப்பாளரினால் ஒரு கணக்கெடுப்பு குழு நியமிக்கப்பட்டு, பெறப்பட்ட காலணி பரிசுப்படிவங்கள் கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். இது வலயக் கல்வி பணிப்பாளரின் பொறுப்பாகும். அதற்காக ஆசிரியர்களையோ அல்லது ஏனைய அதிகாரிகளையோ பயன்படுத்துவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அதிகாரம் பெற்றுள்ளார். சம்பந்தப்பட்ட அறிக்கையின் பிரதியை கல்விச் செயலாளர் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்க வேண்டும்.

11.3 தமது வலயத்தை சேர்ந்த அனைத்து பாடசாலைகளிலிருந்தும் பெறப்பட்ட பரிசுப்படிவங்களை விநியோகித்த பிறகு பெறப்பட்ட அறிக்கைகளிலிருந்து இறுதி அறிக்கை மாகாண அலுவலகங்களால் தயாரிக்கப்பட வேண்டும் என்பதோடு SSV 04 மாதிரி வடிவில் மீதமுள்ள பரிசுப்படிவங்களுடன் ஒரே தடவையில் 15.02.2024 க்கு முன்னர், மேலதிக செயலாளர் (பெறுகை), 5வது மாடி, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். இல்லையெனில், அதை நேரடி கையளிப்புச்செய்ய வேண்டும்.

11.4 கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளில் பயிலும் அனைத்து மாணவர்களும், பிரிவெனாக்களில் தெரிவு செய்யப்பட்ட பிக்கு மாணவர்களும் மற்றும் சீலமாதாக்களும் மற்றும் சாதாரண மாணவர்களும் 2024 புதிய பாடசாலை தவணையின் தொடக்கத்தில் பாதணிகள் அணிந்து பாடசாலைக்கு/ பிரிவெனாவுக்கு வரவேண்டும் என்பதே கல்வி அமைச்சு மற்றும் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். எனவே, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி 2023 ஆம் ஆண்டு பாடசாலை மூன்றாம் தவணை முடிவடையும் போது பிள்ளைகளுக்கு பரிசுப்படிவங்களை வழங்குவதற்கு தேவையான செயற்பாடுகளை முன்னெடுப்பது உங்கள் அனைவரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

என்.எம்.ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

SSV 01(EDU)

மாகாண கல்விப் பணிப்பாளர்

..............................................

..............................................

**2023 பாடசாலை பாதணி பரிசுப்படிவ விநியோகம்**

2023 ஆம் ஆண்டிற்காக, தங்களால் மாகாணத்தின் வலயங்களில் உள்ள கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கு கோரியுள்ள மற்றும் கல்வி அமைச்சின் பிரிவன பிரிவினால் பரிந்துரைக்கப்பட்ட பிரிவெனாக்களுக்குரிய பாதணி பரிசுப்படிவங்கள் அளவு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வலயம் | கோட்டம் | பரிசுப்படிவ அளவு | பரிசுப்படிவ இலக்கம் | | பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| | | | தொடக்கம் | வரை | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள பரிசுப்படிவ தொகை சரியானது

ஓப்படைத்தேன்

ஏற்றுக்கொண்டேன்

..............................................
செயலாளருக்குப் பதிலாக
கல்வி அமைச்சு
அதிகாரப்பூர்வ முத்திரை

..............................
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
அதிகாரப்பூர்வ முத்திரை

SSV 01(Zone)

வலயக் கல்விப் பணிப்பாளர்

...............................................

...............................................

**2023 பாடசாலை பாதணி பரிசுப்படிவ விநியோகம்**

2023 ஆம் ஆண்டிற்காக, தங்களால் வலயத்தில் உள்ள கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கு கோரியுள்ள பாதணி பரிசுப்படிவங்கள் மற்றும் பிரிவனாகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட பாதணி பரிசுப்படிவங்கள் அளவு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| கோட்டம் | பரிசுப்படிவ அளவு | பரிசுப்படிவ இலக்கம் | | பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள பரிசுப்படிவ தொகை சரியானது

ஒப்படைத்தேன்

ஏற்றுக்கொண்டேன்

...............................................
மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு பதிலாக
அதிகாரப்பூர்வ முத்திரை

.............................
வலயக் கல்விப் பணிப்பாளர்
அதிகாரப்பூர்வ முத்திரை

பிரதி: செயலாளர். கல்வி அமைச்சு

SSV 01(DIV)

கோட்டக் கல்விப் பணிப்பாளர்

...............................................

...............................................

**<u>2023 பாடசாலை பாதணி பரிசுப்பபடிவ விநியோகம்</u>**

2023 ஆம் ஆண்டிற்காக, தங்களால் கோட்டத்தில் உள்ள கடினமான, மிகவும் கடினமான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகளுக்கு கோரியுள்ள பாதணி பரிசுப்பபடிவ அளவு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பாடசாலை | பரிசுப்பபடிவ அளவு | பரிசுப்பபடிவ இலக்கம் | | பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள பரிசுப்பபடிவ தொகை சரியானது

ஓப்படைத்தேன்

ஏற்றுக்கொண்டேன்

...............................................
வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பதிலாக
அதிகாரப்பூர்வ முத்திரை

..............................
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
அதிகாரப்பூர்வ முத்திரை

பிரதி: 1. செயலாளர். கல்வி அமைச்சு
2. மாகாண கல்வி பணிப்பாளர்

SSV 02(Piv)

பிரிவேனாதிபதி

..............................................

..............................................

**<u>2023 பாடசாலை பாதணி பரிசுப்படிவ விநியோகம்</u>**

2023 ஆம் ஆண்டிற்காக, கல்வி அமைச்சின் பிரிவெனா பிரிவினால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தங்கள் பிரிவெனாவுக்குரிய பாதணி பரிசுப்படிவ அளவு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பிரிவேனா | பரிசுப்படிவ அளவு | பரிசுப்படிவ இலக்கம் | | பெறுமதி ருபா சதம் |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள பரிசுப்படிவ தொகை சரியானது

ஓப்படைத்தேன் ஏற்றுக்கொண்டேன்

.............................................. ..............................

வலயக் கல்விப் பணிப்பாளர் பிரிவேனாதிபதி

அதிகாரப்பூர்வ முத்திரை

அதிகாரப்பூர்வ முத்திரை

பிரதி: 1. செயலாளர். கல்வி அமைச்சு
2. மாகாண கல்வி பணிப்பாளர்

அதிபர்

....................................................

....................................................

**2023 பாடசாலை பாதணி பரிசுப்படிவ விநியோகம்**

2023 ஆம் ஆண்டிற்காக, தங்கள் பாடசாலைக்குரிய பாதணி பரிசுப்படிவ அளவு பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| பாடசாலை | கோட்டம் | பரிசுப்படிவ அளவு | பரிசுப்படிவ இலக்கம் | | பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| | | | தொடக்கம் | வரை | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| மொத்தம் | | | | | |

மேலே குறிப்பிட்டுள்ள பரிசுப்படிவ தொகை சரியானது

ஓப்படைத்தேன் ஏற்றுக்கொண்டேன்

................................................. ...............................

கோட்டக் கல்விப் பணிப்பாளர் அதிபர்

அதிகாரப்பூர்வ முத்திரை

அதிகாரப்பூர்வ முத்திரை

பிரதி:

1. மாகாண கல்வி பணிப்பாளர்
2. வலய கல்விப் பணிப்பாளர்

SSV 03

## 2023 பாடசாலை பாதணி பரிசுப்படிவ விநியோகம் - வகுப்பு சாராம்சம்

1. 1.1 பாடசாலை/ பிரிவெனா பெயர் :-
   1.2 தொகை கணக்கெடுப்பு இலக்கம :-
2. 2.1 பாடசாலை/ பிரிவெனாக்குரிய வலயம் :-
   2.2 பாடசாலைக்குரிய கோட்டம் :-
3. வகுப்பு :-

| தொடரில. | மாணவர் பெயர் ஆசிரியர் பெயரும் கையொப்பமும் | பரிசுப்படிவ இலக்கம் | பெறுமதி | ஒப்படைத்தேன்-ஆசிரியர் ஒப்பம் | ஏற்றுக்கொண்டேன் மாணவன் / பாதுகாவலர் ஒப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

...................................................
ஆசிரியர் பெயரும் கையொப்பமும்

...................................................
அதிபர் பெயரும் கையொப்பமும்

அதிகாரப்பூர்வ முத்திரை

பிரதி :-
1. செயலாளர். கல்வி அமைச்சு
2. மாகாண கல்வி பணிப்பாளர்

பாதணி பரிசுப்படிவங்களை விநியோகித்த பிறகு மீதமுள்ள பரிசுப்படிவங்களை திரும்பப் பெறுதல்

மேலதிக செயலாளர் (பெறுகை)
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

.............................................. பாடசாலை/ பிரிவெனாவில் உள்ள ........ ............................. மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாணவர்களுக்கு விநியோகம் செய்வதற்காக வழங்கப்பட்ட பாதணி பரிசுப்படிவ விநியோக ஆவணத்தின்படி மீதமுள்ள பரிசுப்படிவங்களை இத்துடன் திருப்பி சரியாக ஒப்படைக்கின்றேன்.

| வகுப்பு | பெற்ற பரிசுப்படிவ அளவு | விநியோகித்த பரிசுப்படிவ அளவு | மீள ஒப்படைக்கும் பரிசுப்படிவ அளவு | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| மொத்தம் | | | | |

மீதமுள்ள பரிசுப்படிவங்களை தொகை வரிசை இலக்க விவரங்களுடன் SSV 04 (a) ஆகத் தயாரிக்கப்பட்டு இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்படைத்தேன் ஏற்றுக்கொண்டேன்

.............................................. ..............................................
அதிபர் பெயர் மற்றும் கையொப்பம் கோட்டக் கல்வி பணிப்பாளர்
அதிகாரப்பூர்வ முத்திரை அதிகாரப்பூர்வ முத்திரை

ஒப்படைத்தேன் ஏற்றுக்கொண்டேன்

.............................................. ..............................................
கோட்ட கல்விப் பணிப்பாளர் வலயக் கல்வி பணிப்பாளர்
அதிகாரப்பூர்வ முத்திரை அதிகாரப்பூர்வ முத்திரை

ஒப்படைத்தேன் ஏற்றுக்கொண்டேன்

.............................................. ..............................................
வலயக் கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி பணிப்பாளர்
அதிகாரப்பூர்வ முத்திரை அதிகாரப்பூர்வ முத்திரை

(மாகாண கல்விப் பணிப்பாளரால் வலயக் கல்வி அலுவலகங்களினூடாக அனுப்பப்படும் அனைத்து மிகை பரிசுப்படிவங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு கல்வி அமைச்சின் பெறுகை பிரிவுக்கு முறையாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.)

## புற்றாக்குறை பாதணி பரிசுப்படிவ தொகை கோரல் விண்ணப்பம்

மேலதிக் செயலாளர் (பெறுகை)
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

............................................ பாடசாலை / பிரிவெனாவிலுள்ள .................................... மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் எனக்கு வழங்கப்பட்ட பாதணிகளின் பரிசுப்படிவ அளவு பாடசாலை / பிரிவெனாவிலுள்ள மாணவர்களுக்கு போதாது என்பதால், கீழ்கண்ட தொகையில் காலணிகளை பரிசுப்படிவங்களை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| வகுப்பு | பெற்ற பரிசுப்படிவ அளவு | விநியோகித்த பரிசுப்படிவ அளவு | மேலும் தேவையான பரிசுப்படிவ அளவு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| மொத்தம் | | | |

ஒப்படைத்தேன்

...............................................
அதிபர் பெயர் மற்றும் கையொப்பம்
அதிகாரப்பூர்வ முத்திரை

பரிந்துரை

..............................................
கோட்ட கல்விப் பணிப்பாளர் பெயர் மற்றும் கையொப்பம்
அதிகாரப்பூர்வ முத்திரை

பரிந்துரை

..............................................
வலயக் கல்விப் பணிப்பாளர் பெயர் மற்றும் கையொப்பம்
அதிகாரப்பூர்வ முத்திரை

அனுமதி

..............................................
மாகாண கல்விப் பணிப்பாளர் பெயர் மற்றும் கையொப்பம்
அதிகாரப்பூர்வ முத்திரை